17.09.2025

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி),இளைஞர் செஞ்சிலுவைச் சங்கமும் வணிகவியல் துறையும் இணைந்து ‘இங்கு போதைப் பொருள்கள் இல்லை’ எனும் தலைப்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மாவட்ட புகையிலை தடுப்பு ஆலோசகர் மருத்துவர் R.சுகன்யா,B.D.S. கலந்து கொண்டார்.

அவர் தம் சிறப்புரையில் புகையிலை மற்றும் பிற போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள், பாதிப்புள்ளவர்களுக்கு ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள், அவற்றை ஆரம்ப நிலையிலே சரிசெய்யும் மருத்துவ முறைகள் பற்றி எடுத்துரைத்தார். மேலும் 200 மாணவர்களுக்கு போதைப்பொருள் பாதிப்பு குறித்த மருத்துவப் பரிசோதனையும் செய்தார்.

முன்னதாக மாவட்ட செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான Dr..கு.தயாநிதி வரவேற்றார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் இரா.கதிரேசன் நன்றி கூறினார்.